செ.வெ.எண்:17 நாள்: 10.03.2020

**கரூர் மாவட்டம்**

**பேரிடர்காலங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப.,அவர்கள் துவக்கிவைத்தார்கள்**

அதன் விபரம் வருமாறு:

கரூர் மாவட்ட வருவாய் பேரிடர் மோலாண்மைத்துறையின் சார்பில், பேரிடர் காலங்களில் மேற்கொள்ளப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் தலைமையில் அட்லஸ் கலையரங்கில் இன்று (10.03.2020) நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் பேசியதாவது:

மழை, வெள்ளம், புயல், பூகம்பம் போன்ற பேரிடர் காலங்களில் பொதுமக்கள் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து, மாணவ-மாணவிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் இன்று உங்களிடையே தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைகள் மூலம் மாதிரி ஒத்திகை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

மழைக்காலங்களில் சாலையிலோ, காவிரி ஆற்றிக் கரைகளிலோ தண்ணீர் கரைபுரண்டு ஓடும்போது தண்ணீர் வரும் வேகத்தை அறியாமல் கடக்க முயலக்கூடாது. தண்ணீர் வேகமாக வரவில்லை என்று நினைத்து நாம் நீரில் இறங்கினால் நம்மால் நீரின் வேகத்தில் தாக்குப்பிடிக்க இயலாது. நமது கரூர் மாவட்டத்தில் உள்ள காவிரி ஆற்றுப்பகுதிகளில் நீரில் சிக்கி உயிரிழக்கும் அளவிலான சம்பவங்கள் நடந்ததற்கு நீரின் வேகத்தை அறியாமல் ஆற்றில் இறங்கியதே காரணமாக அமைந்திருக்கின்றது.

இதுபோன்ற பேரிடர் காலங்களில் எவ்வாறு செயல்படவேண்டும் என்பது குறித்து பொதுமக்களுக்கு மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு வழிகளில் போதிய விழிப்புணர்வு தொடர்ந்து ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது அனைவரையும் அச்சுறுத்தி வருவது கொரனோ எனப்படும் வைரஸ். இந்த வைரசானது காற்றில் பரவக்கூடியது அல்ல. மாறாக தொடுதலால் பரவக்கூடியதாகும். நாம் அன்றாடம் பல்வேறு காரணங்களுக்காக வெளியில் செல்லும்போது பயன்படுத்துகின்ற கழிப்பறைகள், கைகழுவும் இடங்கள், இருக்கைகள் என நாம் தொடும் நிலையில் உள்ள அனைத்து இடங்களையும் துாய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்.

தொற்று உள்ள ஒருவர் பயன்படுத்திய பொருட்களில் சுமார் 48 மணி நேரத்திற்கு இந்த வைரஸ் உயிருடன் இருக்கும் என்பது அனைவரும் அறிந்துவைத்துக்கொள்ள வேண்டும். எனவே, நாம் பொது இடங்களுக்குச்செல்லும்போது வாஷ்பேஷன், இருக்கைகள் போன்றவற்றில் நாம் தொடும்போது, சுத்தமாக கைகளை கழுவிவிட வேண்டும். கைகளை நன்றாக கழுவிய பின்னரே, நமது மூக்கு மற்றும் முகங்களில் கைகளை வைக்க வேண்டும். ஏனென்றால் தொற்று ஏற்பட்டால், வைரஸ் தாக்குதலால் சலி, மற்றும் ஜலதோசம் ஏற்படும்.

பேரிடர் காலங்களில் நாம் எவ்வாறு செயல்படவேண்டும் என்பது குறித்து இன்று உங்களுக்கு வழங்கப்படும் மாதிரி ஒத்திகை நிகழ்ச்சியை அனைவரும் நன்கு புரிந்துகொண்டு மற்றவருக்கும் எடுத்துரைக்க வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

பேரிடர் காலங்களில் தகவல் தெரிவிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள முதல் “முதல்நிலை தகவல் தெரிவிக்கும்” நபர்களுக்கு பாதுகாப்பு அடையாள உடைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

பின்னர் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை, கோவை ஸ்ரீ சத்ய சாய் சேவா சங்கம், கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் தேசிய மாணவர் படையினரின் சார்பில் பேரிடர் காலங்களில் நாம் எவ்வாறு செயல்படவேண்டும் என்பது குறித்து ஒத்திகை நிகழ்த்தி காட்டப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், வருவாய் கோட்டாச்சியர் திருமதி வ.சந்தியா, மாவட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை அலுவலர் திரு.கே.ஜே.விவேகானந்தன், கொங்கு அறக்கட்டளை தலைவர் அட்லஸ் திரு.நாச்சிமுத்து, கால்நடை பராமரிப்புத்துறையின் மண்டல இணை இயக்குநர் மரு.இராதாகிருஷ்ணன், இந்தியன் செஞ்சிலுவை சங்கத்தின் கரூர் மாவட்ட கிளை தலைவர் திரு.ஜோசப், வட்டாட்சியர்கள் திரு.செந்தில் (மண்மங்கலம்), திரு.விஜயகுமார் (பேரிடர் மேலாண்மைத்துறை), திருமதி.அமுதா(கரூர்), திரு.சிவக்குமார் (புகளூர்) உள்ளிட்ட அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.